ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

अभिध्यावै प्रथमं हन्ति चैनं कामक्रोधौ गृह्यचैनं च पश्चात् ।
एतान्बालान् मृत्यवे प्रापयन्ति धीरास्तु धैर्येण तरन्ति मृत्युम् ॥

ஓ! மஹாராஜனே!! விஷயப்பிரவிருத்தியுள்ள புருஷனை முதலில் விஷயத் தியானமானது கெடுத்துவிடுகிறது. பிறகு அவனை காமமும், கோபமும் துரிதமாய்ப் பிடித்துக்கொண்டு கெடுக்கின்றன. இவைகள் பாமர ஜனங்களை (இவ்விதம்) மிருத்தியுவுக்குக் கொடுக்கின்றன. தீரர்களோவென்றால் தைரியத்தினால் மிருத்தியுவைத் தாண்டுகிறார்கள்.

அத்தியாஸ தோஷத்தால் ஞானேந்திரியங்கள் ஐந்துடன் கூடின ஜீவர்களுக்குப் பவபந்தம் மனக்கலபிதமேயன்றி பரமார்த்தமில்லை. இம் மனமானது ரஜஸ், தமஸ், என்றிருகுணங்களுடன் சேர்ந்தால் மலினமாகி பந்தத்தையும் சுத்த ஸத்வகுணப் பிரதானமானால் மோக்ஷத்தையும்கொடுக்கும். ஆகவே முமுக்ஷுக்கள் மிகப்பிரயத்தனத்துடன் மனதைச் சோதிக்க வேண்டும். இது சோதிக்கப்பட்டால் மோக்ஷம் கரதலாமலகமென்பதில் ஸந்தேகஞ் சிறிதுமில்லை. மனதைச் சோதிக்கவேண்டுமானால் விஷயாசையை வெறட்டித் துரத்தவேண்டும். விஷயாசையானது விஷயங்களை அடிக்கடி அனுஸந்தானஞ் செய்வதால் விருத்தியடைவதால் க்ஷணமாத்ரமேனும் விஷயங்களை விவேகியானவன் சிந்தனை செய்யலாகாது. விஷய சிந்தனை விருத்தியானால் விஷயாசை முதலியவையும் விருத்தியடைந்துவிடும். ஆகவே விவேகிகள் வைராக்கியத்தால் விஷயக் தியானத்தை விலக்கவேண்டும். நிரந்தரம் ஆத்மஸ்வரூபானுஸந்தானத்தைச் சிரத்தையுடன் செய்யவேண்டும். இவ்விரண்டினால்தான் இம் மனம் என்னும் புலியை அடக்கமுடியும். மனம் அடங்கினால் இவ்வுலகமடங்கும். மனம் விரிந்தால் இவ்வுலகமும் விரியும். இப் பிரபஞ்சமனைத்தும் இம் மனோ விலாஸமேயன்றி உண்மையில்லை. சுழுப்தியில் மனம் ஒடுங்குங்கால் ஒன்றுந் தோன்றவில்லையல்லவா? ஸ்வப்பனத்திலும் தன் சாமர்த்தியத்தால் அனேக ஆச்சரிய விஷயங்களை மனம் ஸிருஷ்டிக்கவில்லையா? ஆகையால் மனதை எவ்விதத்தாலாவது நசிக்கச்செய்தால் மரணாதிகளைத் தாண்டி மோக்ஷம் பெறலாம் என்பது அபிப்பிராயமாகும். சுபம்.

V. J. S.

ஆர்ய தர்மம்.

ஆங்கிரஸ-௵ ஐப்பசி-௴ ௪௨

"காங்கிரஸ்ஸால் விளைந்த வினை."

நம் பாரதநாட்டிற்கு ஸ்வராஜ்யம் வாங்கிக்கொடுப்பதற்காக ஆதியில் ஆரம்பிக்கப்பட்ட காங்கிரஸ் மஹாஸபையால்த்தான் நம்மிந்தியாவில் அனேக கலகங்களும், அடிதடிகளும், கொலை கொள்ளை முதலியவைகளும், ஒற்றுமைக்குறைவுகளும் அதிகரித்து விட்டனவேயன்றி அதற்கு முன்பு ஏற்பட்டனவல்ல. அதிலும், ஸ்ரீமான் பாலகங்காதர திலகர் முதலிய மகான்கள் காங்கிரஸ் தலைவர்களாகவிருந்த காலத்திலுமிவ்வளவு அனர்த்த ஸம்பவமில்லையென்று சொல்லலாம். ஆதியில் காங்கிரஸ் தலைவர்கள், ஜாதிபேதம், தீண்டாமை, தீண்டாதவரின் ஆலயப்பிரவேசம், வர்ணாச்ரமதர்ம சீர்திருத்தம், இவை முதலிய காரியங்களைப்பற்றி பிரசாரம்செய்ய முன்வந்தார்களில்லை. மகாத்மா காந்தி காங்கிரஸ் தலைவராக விளங்கினது முதல் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்றும், அதற்கறிகுறியாக அவர்களை ஆலயங்களில் பிரவேசிக்கும்படி செய்யவேண்டுமென்றும், பிரசாரம் நாடெங்கும் பறவலாயிற்று, ஸ்வராஜ்யம் அடையவேண்டுமென்ற மயக்கங்கொண்ட நம் நாட்டு மக்களுக்கு காந்தியினிடத்தில், மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. அவர் நியாயத்திற்கும், வழக்கத்திற்கும், விரோதமாகச் சொல்லும் வார்த்தைகளையெல்லாம், வேத வசனமாக நம்பி நம்மவர் கூத்தாடத் தலைப்படுகிறார்கள். நம்மவர் எதையும் ஆய்ந்தோய்ந்து கவனித்துப் பார்த்துச் செய்வதில்லை. நமக்கு அனேக விதங்களில் அனர்த்தங்களை உண்டுபண்ணுகிற காந்தியை மஹாத்மாவென்று எப்படி அழைப்பது. இவரை வஞ்சகவேஷதாரியென்றுதானே நாம் நம்பவேண்டும். இவரை தேசபக்தராக ஒருவாறு ஒப்புக்கொள்வது யுக்தமானாலும், தெய்வபக்தரென்றும், ராஜபக்தரென்றும் இவரைஒருபோதும் ஒப்புக்கொள்ளவேமுடியாது.

இந்த காந்தியின் புத்தியானது ஒரு நிலையில் ஒரு நிமிஷமாவது நில்லாமல் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கின்றது. முதலில் இவர் ஹிந்துக்களும் மகம்மதியர்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்தால் ஸ்வராஜ்யம் குதித்துவிடுமென்று அரும்பாடுபட்டார். அது பறந்துபோய்விட்டது. அதன்பிறகு சத்தியாக்ரஹ இயக்கத்தை ஆரம்பித்தார். அதனாலும் ஸ்வராஜ்யம் கிடைத்தபாடில்லை. இப்போது தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்றும், தீண்டாதவர்கள் ஆலயப்பிரவேசம்செய்யவேண்டுமென்றும், அதனால்தான் ஸ்வராஜ்யம்கிடைக்குமென்றும் ஆரம்பித்திருக்கின்றார். இதற்கும் ஸ்வராஜ்யத்துக்கும் காரியகாரணபாவம் கற்பிப்பது கனவுமாத்திரமேயாம். இதனால்இவர்முறட்டுப் பிடிவாதமுள்ளவரென்பது நன்கு புலனாய்விட்டது. காந்தியானவர் நம் நாட்டில் விளங்கும் தேவாலயங்களின் ரஹஸ்யத்தை அணுவளவும் அறியவேயில்லை. இதனால் இவரை ஆஸ்திகரென்று அழைப்பதற்கும் அவகாசமில்லை. இவரை நமது ஹிந்துமதத்தை அழிக்கவந்த மறைந்த நாஸ்திகரென்றே தீர்மானமாயும் தைரியமாயும் சொல்வதற்கிடமுண்டு. தீண்டாதாரை ஆலயப் பிரவேசம் செய்யும்படி அனுமதியளிக்கப்பட்டு ஆலயப்பிரவேசஞ் செய்வார்களானால் அவர்களுக்கேற்படும் ஆபத்துக்களை விலக்கிவிட காந்தியால் முடியுமா? அவர்களுக்கு ஆலயப் பிரவேசத்தால் ஆபத்துக்களும் அனர்த்தங்களும் உண்டாகமாட்டாதென்றுதான் இவரால் சொல்லமுடியுமா? இவ்விதம் சொல்வதற்குத்தான் காந்திக்கு அதிகாரமேது. காந்திக்குக் கீழ்படிந்து நடக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தம் நம்மவருக்கு ஏதாவதுண்டா?

उत्पथं प्रतिपन्नस्य परित्यागो विधीयते ।

என்றவிதமாக இவர் நம் ஜன ஸமூஹத்தினின்றும் பஹிஷ்கரிக்க வேண்டியவரேயாவாரல்லவா? முடிவில் இவருடைய பிரவிருத்தியெல்லாம் நிஷ்பலமாய்த்தான் முடிந்துவிடும்.

ஆர்யர்களே! இன்னொரு விஷயம் கவனிக்கத் தக்கது. காங்கிரஸ் தலைவர்களில் சிலர் நம்நாட்டுத் தேவாலய தர்மகர்த்தாக்களிடம் சென்று அவர்கள்மூலமாக தீண்டாதாரை ஆலயம் புகும்படி செய்துவிட ஆரம்பஞ்செய்தனர். அது பலிக்கவில்லை. ஏனென்

ருல் தர்மகர்த்தாக்களுக்குத் தீண்டாதாரை வழக்கத்திற்கு விரோதமாக ஆல்யப்பிரவேசம் செய்விக்க தேவஸ்தான சட்டம் இடங்கொடுக்கவில்லை. ஆகவே தீண்டாதாருக்கு ஆலயப்பிரவேசாதிகாரமேற்படும்படியாக தேவஸ்தான சட்டத்தை மாற்றி அமைக்கும்படி அரசாங்கத்தாரிடம் பிரார்த்தித்துக்கொள்ளவேண்டும். காங்கிரஸ் தலைவர்களுக்கு அரசாங்கத்வேஷமதிகமானதால் அரசாங்கத்தாரை இதுவிஷயமாய் சரணாகதி செய்வது மிக எளனமாகுமன்றோ?

இதனால் தற்போது காங்கிரஸ் தலைவர்கள் ஒன்றும் புரியாமல் விழித்துக்கொண்டிருக்கும்படி நேரிட்டுவிட்டது. அரசாங்கத்தாரிடம் தேவஸ்தான சட்டத்தை மாற்றும்படிப் பிரார்த்திக்கவும் முடியவில்லை. தர்மகர்த்தாக்களிடம் சரண்புகுந்து காரியத்தை ஸாதிக்கவும் முடியவில்லை. காந்தி சிஷ்யர்கள் அரசாங்கத்தாரிடம் தேவஸ்தான சட்டத்தைத் தம் கக்ஷிக்கு அனுகூலமாக மாற்றி அமைக்கும்படி கேட்டுக்கொள்வாரேயானால் அவர்களுக்கு அது அதிக அவமானமன்றோ?

ஆர்யர்களே! இதனால் அரசாங்கத்தார் இக் காந்தி சிஷ்யர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஒருக்கால் தேவஸ்தானசட்டத்தை மாற்றிவிட்டால் நாம் என்ன செய்வோமென்று கவலைப்படவேண்டாம் என்பது விசதமாயிற்று.

காந்தி யார்.

இவர் தேவரா?, அல்லது மகரிஷியா?, அல்லது அரசனா?, இல்லாவிட்டால் ஜகத் குருவா?, அல்லது மகாத்மாவா?, அல்லது சிறந்த தத்வ ஞானியா? யோகியா? ஸித்தனா? பகவானா? உண்மையில் இவர் இவ்வகையில் எதாவதொன்றைச்சேர்ந்தவர் என்று கூற இடமேயில்லை. அப்படி எதாவதொருவகையில் சேர்ந்தவராயிருந்தால் தானும் பிரமாணவிருத்தமாக நடக்கமாட்டார். பிறரையும் அவ்விதம் நடக்கும்படி உபதேசித்துக் கெடுக்கமாட்டாரென்பது நிச்சயம். இவருக்குத் தெய்வமே கிடையாது. தெய்வமிவருக்கிருக்குமானால் இவர் இத் தென்னாடு விஜயம்செய்தகாலத்தில் எங்கேயாவது தேவாலயப்பிரவேசமாவது செய்தாரா? இவர் சிறந்த ஆத்மதத்வக்ஞானியானதால் இவருக்குத் தேவாலயப்பிர

வேசமவசியமில்லை என்றால் ஞானிக்குத் தேவாலயம் வேண்டா மென்று சொன்னவர் யார்? ஆத்மதத்வக்ஞானிக்கும் ஞானநிலை நழுவிவிடும்பொழுது பக்தி நிலை அத்யாவச்யகமன்றோ? இந்நிலையி லிவர்களுடன் பக்திரஸப் பிரவாகமல்லவா குடிகொண்டிருக்கும். பக்திநிலையில் பகவதாலயப் பிரவேசமும் இவர்களுக்கு ஏற்படுவது ஸ்வபாவமே. இவ்விதமிருக்க காந்தி ஞானியாயிருந்தால் பக்த ராயுமிருத்தல்வேண்டும். ஞானியில்லையென்றால் பக்தருமில்லை, பத்தர்தானென்பது நிச்சயம். போலி பக்தரென்றோ, போலி ஞானியென்றோ ஒருவாறு இவரைக் கூறலாம்.

காந்தி உண்ணாவிருதம்.

இவர் இவ் விருதம் பூண்டது எதற்காக? ஸ்வராஜ்யம் கிடைப்பதற்காகவென்றால் அந்தோ ஆச்சரியம்! இவர் பட்டினிக்குப் பயந்துவிடுவரோ? ஸ்வராஜ்யம் கொடுப்பவர். மற்றவர் இவ்விருதத்தை இதுபோன்ற விஷயத்தில் கையாளுவரேயானால் குற்றவாளியாகவல்லவா தெரிந்தெரிக்கப்படுவார். ஆகையால் இதனால் ஸ்வராஜ்யம் கிடைக்கும் என்பது பகற்கனவு மாத்திரமே.

தீண்டாதாரை ஆலயப் பிரவேசம் செய்வித்துத் தீண்டாமையை ஒழிப்பதற்காக இவர் இவ்விருதம் பூண்டதாகச் சொல்லவும் முடியவில்லை. தீண்டாமையை ஒழித்துத் தீண்டாதாரை ஆலயப்பிரவேசம் செய்விக்காவிட்டால் இவரொருவர்தானே பட்டினிகிடந்து உயிர்விடுவேனென்று சொல்கிறார். அவர்கள் ஆலயத்தில் அக்கிரமமாக நுழையும்பக்ஷத்தில் பல்லாயிரம் ஜனங்கள் தங்களுயிரை விடுவதற்குத் தயாராகவிருக்கின்றனவே? பலபேர்களின் உயிர்போவது தேவலையா?

ஆகையால் ஆர்யர்களே! காந்தியின் சொல்லை முழுவதும் நம்பி மோசம்போகாதீர்கள். காந்தியின் அனுபவமெல்லாம் நாட்டிற்கு நன்மையைத் தேடுமென்பது நிச்சயமில்லை. செய்யவேண்டிய முக்கிய வேலைகளைவிட்டு தீண்டாதாரின் ஆலயப் பிரவேச வழக்குக் காரியத்தில் தலையிடுவது இவருக்கு அழகாகுமா? சமரசமாக ஜனங்களை ஆளும் உணர்ச்சியை அடைந்தபிறகன்றோ அரசாங்கத்தாரிடமிவர் செல்லவேண்டும். சமரச உணர்ச்சியென்பது சிறிதளவுமிவரிடமில்லையே. இவருடைய உணர்ச்சி

யால் நமக்குள் கலகமும் ராஜாங்க த்வேஷமுந்தான் விளைந்தபயன். இதற்கும் இந்த காங்கிரஸ் மஹாஸபைதான் காரணம் என்பது நிச்சயம். சுபம்.

V ஜகதீசுவர சாஸ்திரிகள்'

ஓர் விக்ஞாபனம்,

தற்போது பிராம்மண்யத்தை நிலைநாட்ட முன்வரவேண்டியது ஒவ்வொரு பிராம்மணனுடைய கடமையாகும். பிராம்மண்யத்திற்குப் பலவிதத்திலும், தேய்வுஏற்பட்டதுமன்னியில் அதற்கு ஓர் பெரிய குழியைத்தோண்டவும் தற்கால நாகரீக உலகத்தில் பிராம்மண விந்துவிற்குப் பிறந்த அனேகர்களும் முற்பட்டிருப்பதானது வருந்தத்தக்கதே. உண்மை பிராம்மணீயத்தை அழிக்காது அதைக் காப்பாற்றிவாவாவதுவேண்டுமே என்ற உணர்ச்சியுடன் சிலர் 1000-த்தில் ஒருவர் எங்கேயாவது மூலை முடுக்குகளிலிருந்து வெளிவருவார்களேயானல் அவர்களுக்கு ஆதாவு கிடைப்பதும் அரிதாக இருக்கிறது. சிலர் இம்மாதிரியான கூட்டத்தவரைப் பயித்தியக்காரர்கள் என்கின்றனர். மற்றுஞ் சிலர் இக்கூட்டத்தினர் தேசத் துரோகிகள் என்றும்- மற்றும் பலவிதமான பழியைச் சுமத்துகின்றனர்கள். பிராம்மண்யத்தின் அபிவிருத்தியில் நோக்கமுள்ள உண்மை உழைப்பாளிகள் எவரெவர் என்றோ, அவர்கள் என்ன நிலைமையில் இருந்துவருகிறார்கள் என்றோ, நமது தக்ஷிண இந்தியாவிலிருக்கும் மடாதிபதிகளோ குருமார்களோ, சிந்திக்கவும் முன்வருவதில்லை என்பதானது மிகையாகாது,

இதுஒருபுறமிருக்க, பிராம்மண்யத்தில் பற்றுள்ள மற்றோர் கூட்டத்தினரும் உளர். இவர்களில் அனேகர் பாண்டித்யமுள்ளவர்களாகவும் இருந்துவருகிறார்கள். இவர்களிலேயே ஒருகூட்டத்தினர் "எது எக்கேடுகெட்டாலென்ன, நாம் முன்னின்று இம்மாதிரியான அபிவிருத்தி இயக்கங்களில் ஈடுபடுவானேன்" என்றும், "சும்மா இருத்தலே சுகம்" என்றும் வாளாயிருந்துவிடுகின்றார்கள். இவர்களுக்கு ஓர் சரியான]ஆண்டுகோல் இருந்தா

லொழிய வெளிக்கிளம்பப்போவதில்லை. மற்றோர் கூட்டத்தின ரோவெனில் கற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். வெளிக் கிளம்பித் தங்களது கட்சியைநிலைநாட்டவும் முற்படுகின்றனர்கள். ஆனால் இவர்களிடையே உள்ள ஓர் பெருங்குறை குறிப்பிடத் தக்கது. யாதெனில் அவர்கள் என்ன சொல்கின்றார்களோ அதை வேதவாக்காகக் கேட்பவர்களும், எதிர்கட்சியில் இருப்பவர்க ளும்கூட கருதவேண்டுமென்றும் நினைத்துவிடுகிறார்கள். வைதீ கத்தை லௌகிக முறையில் ஜனக்களுக்குக் கற்பிக்க இவர்களுக் குப் போதுமான அனுபவம் புத்திசாதுர்யமும் இல்லாக் குறையு மானால் "சுயமரியாதைக் கூட்டத்தவர்களுக்கு வலுவு ஏற்பட்டு வருகிறது. இவர்கள் இம்மாதிரியான உபதேசங்களைச் செய் வதைவிட சும்மா இருக்கலாகாதா என உண்மை பிராம்மணன் நினைக்கவேண்டியும் வருகிறது. ஆனாலும் என்செய்வது! இது வும் தற்போது அரிதாகிப்போய்விட்டதல்லவா?

தவிர, பிராம்மண்யத்திற்குத் தற்போது அழிவுக்குவேண் டிய காரணங்கள் அனேகம் இருக்கின்றன. இவைகளையெல் லாம் தங்கள் சமூகம் அறியாமலில்லை என்றே நினைக்கின்றேன். இக் காரணம்பற்றியே இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன்.

ஓர் வேண்டுகோள்.

ஒவ்வோர் நகரத்திலும் ஒவ்வொரு ஊரிலும் பிராம்மணர்கள் வசித்துவரும் ஒவ்வோர் கிராமத்திலும் ஓர் பிராம்மண சபையை ஏற்படுத்த முன்வரவேண்டும். உண்மை உழைப்பாளிகளைக் கண்டுபிடித்து அவர்களிடை மேற்படி சபைகளை ஒப்படைக்க வேண்டும். இவர்களுக்குப் போதுமான ஆதரவைக் கொடுத்து வரவேண்டும். தங்கள் ஸ்ரீமடத்தின் சார்பாக உபன்யாசகர்களை பிரசுரத்தை முன்னிட்டு மேற்படி சபைகள் உள்ள ஊர்களுக்கு விஜயம்செய்துவரும்படி கட்டளை இடவேண்டும். 7000, 8000-மைல்களுக்கப்பாலிலிருந்து அமெரிக்கா பாதிரிமார்கள் இந்தியா தேசத்தைத் தேடி கிருஸ்துவ மத பிரசாரம் செய்யவருவதை நோக்கின் மேற்கூறிய காரியம் நமது பிரசாரகர்களுக்கு ஓர் பெரி தல்ல. கிருஸ்துவமத பிரசாரத்திற்கு வருஷம் ஒன்றுக்கு சுமார்

60,கோடி டாலர்கள் செலவுசெய்ய ஹேது இருந்துவரும்போது தனலக்ஷ்மி வாசஸ்தலமாகிய நமது நாட்டில் 60,லக்ஷம் ரூபாய் செலவுசெய்யக்கூடிய பொறுப்புவாய்ந்தவர்களும் இல்லாமலில்லை.

நிற்க ஹிந்துமதமென்றால் இன்னது, பிராமணீயம் என்றால் இன்னது என்று பல விஷயங்களைப்பற்றியும் விரிவாகவும் தமாஷ்கதைகள் ரூபமாகவும், துண்டு பிரசுரங்களை அச்சிட்டு பிராம்மண சபைகள்மூலம் இறைத்துவர ஏற்பாடுசெய்ய வேண்டுகிறேன். சென்னையிலிருந்து வெளியாகும் "சுதந்திரச் சங்கு" காலணா பேப்பரைப்போல் நமது சமூகத்தின் முன்னேற்ற விஷயமாக ஓர் காலணா பேப்பர் தேவை. இம்மாதிரியான விஷயங்களில் தாங்கள் செய்யவேண்டிய முக்கிய கடமைகளை எல்லாம் நான் சொல்வதானது அதிக பிரஸங்கித்தனமாகும். என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

சிதம்பரத்தில் பிராம்மண சபையின் ஆதரவின் கீழ் நடைபெற்ற கூட்டத்தின் தீர்மானங்கள் சம்மந்தமாக 'மெயில்" பத்திரிகையில் வெளியான † 'கட்டிங்கை' இந்தலெட்டருடன் வைத்

---

† Brahmin Protest at Chidambaram.

UNTOUCHABLES AND TEMPLE-ENTRY.

(From our own Correspondet)

CHIDAMBARAM Oct. 10

At a meeting of the Brahmin Sabha. Chidambaram, held on friday last, under the presidency of Brimha Sri Ramasastrigal, the following resolutions were passed unanimously.

"This meeting strongly condemns the present attitude of the Congress leaders such a Mr. Gandhi. Messers, C. Rajagopalachari, and Babu Rejendra Prasad, in matters pertaining to religion, as a great shock to Hinduism, and is of the opinion that the

திருக்கிறேன். மேற்படி தீர்மானங்களில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு வாக்யத்தையும் பாகத்தையும் எடுத்துக்கொண்டு அந்த முடிவுகள் சாஸ்திர சம்பந்தமாகவும், லௌகிக சம்பந்தமாகவும் எவ்வளவு தூரம் உண்மையென்று விளக்கிக்காட்டி ஆங்கிலத்திலும் தமிழிலும் துண்டு பிரசுரங்கள்போட்டு ஒவ்வோர் ஊருக்கும் அனுப்பிவைத்து ஜனங்களிடை பரப்பிவந்தால் தற்போதைய ராஜீய உலகத்தில் அதிகநன்மையை உண்டுபண்ணலாம். இக்காரியம் மிகவும் முக்யமானது. இதை உடனே செய்வீர்களென்று பொது ஜனங்களின் சார்பாகவும் நான் வேண்டிக்கொள்

---

action of the reformers has introduced chaos and confusion into Hindu Society which in the end might defeat the very object the reformers seek to achieve."

GURUVAYUR FAST.

"This meeting condemns Mr. Kelappan's fasting as unrighteous coercion, feels that the foundation of society, religion and law are endangered if such fasting can displace or destroy institutions, and deplores the telegrams of responsible and prominent persons inviting the Zamorin of Calicut to commit legal and religious wrong by permitting untouchable to enter the Guruvayur temple."

This meeting expresses its strong disapproval of any attempt at legislative coercion for the purpose of garanting temple entry to the depressed Classes, and prays His exellency the Viceroy to refuse leave for the introduction of any Bill to that purpose in the Legislative Council, Madras, or elsewhere,"

"This meeting appeals to every caste Hindu. both Vaishnavites andSaivites to resist interference with religious customs." "Hindu"

கிறேன். தற்போதைய ராஜீய உலகத்தில் "மெயில்" பத்திரிகையைப்போலுள்ள பத்திரிகைகளைத் தவிர இதர பத்திரிகைகள் பிராம்மண்யத்திற்கு இடங்கொடுக்க முன் வராததானது வருந்தத்தக்கது.

சிதம்பரம் பிராம்மணர் சபை.

இச் சபை சென்ற சுமார் ஒருவருஷத்திற்கு மேலாகத் துவக்கப்பட்டு நடந்துவருகிறது. பிர்மஸ்ரீ ராமா சாஸ்திரிகள், பி. ஏ. ரிடையர்டு சப் மாஜிஸ்ட்ரேட் இதற்குத் தலைவராவர். இவ்வளவு பெரிய ஊரில் இதற்கு, (சபைக்கு) ஆதரவு கிடைப்பதும் கஷ்டமாக இருக்கிறது. காரணம், மேல்நாட்டு நாகரீகத்தில் அதிலும் போலி நாகரீகத்தில் அழுந்திக்கிடக்கும் படித்தவகுப்பினர் அண்ணுமலை சர்வ கலாசாலையை உத்தேசித்து இந் நகரில் நிரம்பிவிட்டார்கள். ஆகையால் இங்கு அதிக பிரசாரம் தேவை.

இது சம்மந்தமாக அதிகம் சொல்லவேண்டியிருக்கிறது. மற்றும் மேற்படி சபைக்கு "ஆள்" சேர்ப்பதும் இங்கு கஷ்டம். ஒருவரையும் சபைக்காக சந்தாகூட கேட்பதில்லை. சபை சம்பந்தமான மீட்டிங் செலவுகளுக்காக கஷ்டம் ஒருபுரமிருக்க ஆஸ்திகர்களை ஒருங்கு சேர்க்கும் கஷ்டத்தை இந்நகரில் என்னென்று சொல்வது! இச் சபையைத் தட்டி எழுப்பி ஆதரிப்பதுமன்னியில் இந் நகரம் போதுமான பிரசாரம் செய்ய முக்யமான பிரசாரர்களை அனுப்பவேண்டியது உங்களது கடமையாகப் போய்விட்டது. இந்த நிலைமையை தங்கள் சமூகத்திற்குத் தெரிவித்துக் கொள்ளவது என் கடமையல்லவா?

இந்த லெட்டர்மூலம் தங்களது சமூகத்திற்குக் கொடுத்த தொந்திரவிற்கு மன்னிக்கவும். தங்களது விவரமான உத்திரவையும் ஆதரவையும் ஆவலுடனும் எதிர்பார்க்கிறேன்.

அநேககோடி நமஸ்காரம்.

V. நாராயண அய்யர்,
(15—10—32)   வடக்குவீதி, சிதம்பரம்.

ஆலயப் பிரவேசம்.

இவ்வசனம் நமக்குப் புதிதல்ல. தேச நன்மைக்கென பாடுபடுவதாய்யாவராலும் தற்காலம் கொண்டாடப்படுகிற காந்தி அவர்களின் மனதில் வெகுகாலமாய்க் குடியிருப்பதை சிலவருடங்களுக்கு முன் நம் நாடுகளில் வந்திருக்கும்போது ஆங்காங்கு சொல்லியுமுள்ளார். ஆனால் அவ்விதம் நடத்த முடியாது என்றே அநேக ஆஸ்திகர்கள் நினைத்ததோடல்லாமல் அவ்விதம் வர்ண ஸாங்கர்யமேற்பட இன்னும் எத்தனையோ நூறுவருடங்களாகுமென்றும் துணிந்திருந்தார்கள். ஆனால் திடீரென அவ்வித ஆவேசம் நொடிப்பொழுதில் திடீரெனப்பெருகும் காட்டாறுபோல் பிரவாகம் வேகமாய்க் கிளம்பிவிட்டது இதற்குக்காரணம் காந்தி அவர்களின் ஸாமர்த்தியம்தான். இரண்டு மூன்றுநாள் பட்டினியால் கவர்ன்மெண்டாரை வசப்படுத்தினார். "அந்த வேதத்தையே இதிலும் உபயோகிக்கச் சற்றுகாலம் பொறுத்திருப்பதாயும் அதற்குள் நிறைவேறாவிடில் பட்டினியால் சரீரத்தை தியாகம் செய்துகொள்வேனெனவும் சபதம் செய்துவிட்டார். இது நம் நாட்டாரை மிகவும் திடுக்கிடச் செய்துவிட்டது. உண்மையில் அவர்களை அவ்விதம் இறங்கவிடுவதில் மனிதர்களுள் யாரும் கொஞ்சமேனும் மனதிலும் நினைக்கமாட்டாரென்பதைச் சொல்ல வேண்டாம். அதற்காகத்தேசமுன்னேற்றத்தலைவர்கள் ஆங்காங்கு பிரசாரம் செய்துகொண்டு கொஞ்சமேனும் தாமதமின்றி பஞ்சமர்களை ஆலயங்களில் பிரவேசிக்கச்செய்யவேண்டுமென்று பாடுபடுகிறவர்கள் வடதேசங்களிலுள்ள ஆலயங்கள் எல்லாவற்றும் அவ்விதம் செய்துவிட்டார்களென்றும் அவர்கள் சொல்லி நம் தென்தேசமும் அப்படியே செய்யவேண்டுமென்றும் அதற்காக ஸ்ரீரங்கம் மதுரை இவ்விரண்டிடத்திலும் பிரவேசிக்கச் செய்துவிட்டால் மற்றஆலயங்களுக்குக் கேட்கவேண்டாமென்று அங்கு தலைவர்களின் முயற்சி அதிகமாய் நடக்கிறது. இது விஷயமாய் பிரபல லௌகிகர்களும் கையெழுத்துச்சாற்றிப் பத்திரிகையும் பிரசுரம் செய்துவருகிறார்கள். இவ்விஷயத்தில் காந்தி அவர்கள் கூறும் வார்த்தை இது நாம் அநேக நூற்றாண்டுகளாக நம் ஹரிஜனங்களை ஒதுக்கிவைத்து பாபம் செய்துவிட்டோம். இந்துக்

களெல்லோருக்கும் பொதுவாய் இருக்கும் கோவில்களில் இந்துக்களான ஒரு சாரரை இவ்விதம் ஒதுக்கிவைப்பது கடவுளின் ஸம்மதமாகாது. கடவுள் நம்மை சபிப்பார். அவர்களையும் நாம் சகோதரர்களாய் அழைத்துக்கொண்டுபோய் தரிசித்தால்தான் நாம் இந்துக்களாவோம். அப்போதுதான் கடவுளின் அனுக்கிரகம் நமக்கு ஏற்படும். இல்லையேல் கடவுளே அங்கிருக்க மாட்டார். நாம் இவ்விதம் செய்து நம்மை ஞாபகத்தினின்றும் விடுவது நம் இந்துமதத்தையும் பரிசுத்தம் செய்யுங்கள், இல்லையேல் இந்துமதமே அழிந்துவிடும் என்கிறார். இதையே மாளவ்யா அவர்களும் கூறுவதுடன் தீண்டாதவர்களென்று ஒரு வகுப்பாரைப் பிரித்துத்தள்ள சாஸ்திரம்இடம்கொடுக்கவே இல்லையென்றும்கூறுகிறார். சாஸ்திரங்கள் கற்ற மாளவ்யா அவர்களே இவ்விதம்சொல்வதால் அது உண்மையாய் தானிருக்கவேண்டுமென்று ஸம்ஸ்கிருத வாஸனையற்ற அநேக லௌகிகப்பிரபுக்களும் உண்மைதானென்று தலைசாய்க்கிறார்கள். இவ்வளவிலும் வசப்படாமல் கோவிலில் விடுவதற்கு மறுக்கும் அதிகாரிகளை தண்டிப்பதற்கென்று ஓர் சட்டமியற்றி விடுவதென்றும் தலைவர்கள் கூறிவிட்டார்கள். இவ்வளவு ஆபத்தினில் இனி கணமேனும் பொறுத்து யோசிக்க மற்றவர்களுக்கு அவகாசமே கொடுபடவில்லையாயினும் இந்த நொடிப்பொழுதிலேயே அவர்கள் கூறும் கூற்றையே கொஞ்சம் ஊன்றிப்பார்த்து அவர்களையே சமாதானம் அதற்குக் கேட்கவேண்டுமென்று சிலர் முன்வருகின்றனர். அதனையே இங்கு வரைகின்றேன். காந்தி அவர்கள் இந்துக்களுள் தீண்டாதார்களை சமமாக பாவித்து சமயாசாரம் நடத்தவேண்டுமென்கிறார்கள். இதில் இவ்விதம் கூறுகிறார்கள். ஸமம் என்றால் யாது அர்த்தம் கொண்டிருக்கிறார். தாய்க்கு பிள்ளைகளிடம் ஸமபுத்தி இல்லையா. இருப்பினும் சிறுகுழந்தைக்கு ஒருவித ஆகாரத்தையும் சற்று பெரியவனுக்கு ஓர் அளவும் இன்னும் அதிகமானவனுக்கும் அதிக அளவும் கொடுப்பதால் ஒருவனுக்குப்போல் மற்றவர்களுக்குக் கொடுக்காததால் ஸமதிருஷ்டி அற்றவளென்று சொல்லிவிடுகிறார்களா, கடவுளுக்குத் தன் சிருஷ்டியில் உள்ள எந்த ஜந்துக்களிடத்தும் ஸமபுத்திதான். ஆயினும் அவனவன் கர்மத்திற்கு அனுகுணமான ஜாதியையும் ஆகாரத்தையும் சுகதுக்கங்களையும் ஏற்றத்தாழ்ச்சியாய்த்தான் ஏற்படுத்தியிருக்கிறார். அத

ளுவ்வருக்கு ஸமதிருஷ்டி குறையுமா இந்துக்களெல்லோருக்கும் பொதுவான கோவில் என்றால் அர்ச்சகர் என்ற ஓர் வகுப்பார் கடவுளைத் தொடவும் பக்கத்தில் நிற்கவும் உரிமைகொண்டிருக்கிறார்கள். அதற்கடுத்து பிராமணர்கள் நிற்கிறார்கள். பிராமணர்கள் வேத வேதாந்தங்கள் கற்று உலகத்தாரால் கொண்டாடப்பட்டிருப்பினும் அர்ச்சகர்கள் கொடுக்கும்பிரஸாதத்தைவணக்கத்துடன் பெற்றுக்கொள்ளவேண்டும். இங்கு அர்ச்சகன் உயர்ந்த ஜாதி என்றும் பிராமணன் கீழ்ஜாதியென்றும் அர்த்தம்கொண்டா நடக்கிறது.

அதுபோல் பிராம்மணர்களுக்கு அடுத்த மண்டபத்தில்தான் பிராம்மணரல்லாதார் நிற்கவேண்டும். முன்கூறியதுபோல் ஜாதி உயர்ந்தது தாழ்ந்ததென்ற அர்த்தம்கொள்ள நியாயம் இல்லை. பிறகு தீண்டாதார்கள் கோபுர வாசலில் நின்று தர்சிக்கவேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். ஆகவே இந்துக்களுக்குப் பொதுவான கோயிலில் பல வித்தியாஸங்களேற்பட்டிருப்பதை அறியாமல் அவர்களுக்குக் கோயிலில்லையென்பது கடவுளுக்குச் சம்மதமாகாதென்ற வார்த்தைப் பொருத்தமாகாது. இனி தீண்டாதாரே இல்லையென்றும், சாஸ்திரங்களில் இல்லையென்றும் மாளவ்யா அவர்கள் சொல்வதைக் கவனித்தால் சாஸ்திரமென்றதென்ன தென்றே அறியாத ஆங்கிலம்மட்டிலும் கற்று மகிமைபெற்ற நம் ஆஸ்திகர்களை மோசம் செய்வதற்காகச்சொல்லும் வார்த்தையோ இதுவென்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஏனெனில் வேதங்களிலும் ஸ்மிருதி புராணம் இதிகாஸங்களிலும் ஏராளமாய்த் தீண்டாதாரைப்பற்றி வெகுவாய்க் கூறப்பட்டிருக்கிறது. தவிர அனுஷ்டானமும் அநேக ஆயிரம் வருடங்களாய் இருக்கிறது. சுமார் 3000-வருடங்களுக்குமுன் அவதரித்த சங்கரபகவத்பாதரும் தீண்டாமையை வற்புறுத்தினார். எல்லாம் போகட்டும். 1932,வருடங்களிலிருந்து தீண்டாமையும் இருக்கிறதென்று ஒப்புக்கொள்ளலாம். இவ்விதம் நீடித்த அனுஷ்டானம் பாபமென்று எவ்விதம் கூறலாம். தவிர இப் பாபத்திற்கு அவர்களைக் கோவிலுக்குள் விட்டு பிராயச்சித்தம் செய்துகொள்ளுங்களென்கிறார்கள். இங்கு சற்று யோசிக்கவேண்டியிருக்கிறது. தீண்டாமை என்பது கொடுமையாயின் பாபமாயின் இதைச் செய்தவர்கள் யார். குற்றம் செய்தவனல்லவா தண்டனை பெறுவது ஸகஜம்.

அப்படியிருக்க அனேக நூற்றாண்டுகளுக்குமுன் நமது முன்னோர்கள் செய்ததற்கு எத்தனையோ தலைமுறைக்குப் பிறகு நமக்குத் தண்டனையா. இது நியாயமாகுமா. மற்றும் இக் குற்றம் நமது முன்னோர்கள் செய்யவில்லை. அவர்களும் வேதசாஸ்திரங்களிலுள்ளபடி தான் தீண்டாமையை அனுஷ்டித்தார்கள். வேதமோ ஈசனருளியது. அதில் முன்பின் முரண் இருக்குமென்று ஒப்புக்கொண்டால் அவரும் நம்போல் ஆய்விடுவார். அவரது கட்டளை ஒருகாலத்திலும் விரோதப்படாது. ஆகவே இப்போது தீண்டாமையை ஒழித்துவிடவேண்டுமென்று காந்தி சொல்வதை ஆழ்ந்துபார்த்தால் வேத சாஸ்திரங்களையும் அந்த தெய்வத்தையும் உடனே ஒழித்துவிடுங்கள் என்று சொல்வதாய்த்தானே ஆகிறது. யாரும் ஆலோசித்துப்பார்க்கட்டும். இவ்விதம் செய்வதற்கு நமக்குப் பிரமாணம் யாதெனவாராய்ந்தால் காந்தியின் மேலான வார்த்தை ஒன்றுதான். ஆகவே இவ்விதம் அர்த்தமாகலாம். வேதமென்பது என் வாக்குத்தான் என்று.

இன்னொன்று யோசிப்போம். கடவுள் எல்லோருக்கும் பொதுவாயினும் அக் கடவுளை மகம்மதியர்கள் கிறிஸ்தவர்கள் அவ்வவ் வேதப்படி வணங்க ஏற்படுத்தியிருக்கும் கட்டடத்திற்குள்ளிருக்கும் கடவுளை அவ்வவ் மதஸ்தர் அவ்வம் முறைப்படி தான் வணங்கவேண்டும். வேறுவிதமாய் வணங்கக்கூடாதென்று அவரவர்கள் கட்டுப்பாடாய் இருக்கிறார்கள். அதற்கு அவரவர்களின் வேதமே பிரமாணம். அதுபோல் இந்துக்கள் கோயில் இந்துக்களுக்குப் பொதுவென்றாலும் கிறிஸ்தவர்கள் மகம்மதியர்கள் ஆலயங்களிலும் இன்னார் இன்னவிடத்திலிருந்துதான்தொழ வேண்டுமென்ற வரம்பு இருப்பதைக் கவனிக்கவேண்டும். ஒரு மதத்திலுமில்லாத வழக்கம் நம் மதத்தில் ஏற்படுத்த நியாயம் உண்டா. இன்னொன்று கவனிக்கவேண்டும். வேத சாஸ்திர ஆகமப்படி கடவுளை பிரதிஷ்டைசெய்ய இன்னின்ன வரம்புப்படி வணங்கினால்தான் பலன் உண்டு. தூரநிற்கவேண்டியவன் சமீபத்தில் வந்தால் தேவரின் மகிமை போய்விடுமென்று எழுதியிருப்பதை நம்பி இதுகாலம்வரை நடந்திருக்கிறது. நந்தனும் அவ்விதம்தான் செய்ததாகவும் ஓர்க்ஷேத்திரத்தில் கோபுரவாசலிலிருந்து மூல லிங்கத்தைப் பார்க்க நந்தி மறைத்திருந்ததினால் தைவத்தை நொந்து பாடினதாயும் அப்போது பகவான் தோன்றி நந்தியைச்

மையை ஒழிக்கப்புறப்பட நமக்கு வேதசாஸ்திரங்களின் வரம்புக் குட்பட்ட கோவில்மட்டிலும் ஏதற்கு. அவர்களை உள்ளே அனுமதிக்காத கோயில்களில் கடவுளே இல்லையென்று காந்தி பலதடவை கூறியிருக்கிறார். ஆகவே அந்தக் கோயில்களில் போகத்தான்வேண்டுமென்று ஸத்தியாக்கிரகம் எந்த நியாயத்தில் சேரும். இன்னொன்று இங்கே யோசிக்கிறார்கள். தெய்வத்தைத் தொழ தீண்டாதவர்களைக் கோயில்களில் விடத்தான்வேண்டு மென்று காந்தி சொல்கிறாரே. தைவம் அங்கு இருக்கிறதென்ற நம்பிக்கை பூரணமாய் அவருக்குண்டாயிருக்குமாயின் அவர் எங்கெந்தக் கோயில்களில்போய் முறைப்படி தரிசனம் செய்திருக் கிறார், அவரைச் சேர்ந்த ஸகாக்களாவது செய்திருக்கிறார்களா. அவர்களது ஸகாக்களில் அநேகர் ஆர்ய ஸமாஜத்தைச் சார்ந்தவர் கள். அவர்களுக்குக் கோயிலும் விக்கிரகாராதனமும் கிடையாது. ஆனால் அவர்களும் தீண்டாதவர்களை உள்ளே விட பிரயத்தனஞ் செய்கிறார்கள். இது எந்த நியாயத்திற் சேருமோ. இன்னொன்று கவனிக்கவேண்டும். இவர்கள் செய்யும் உபன்யாஸங்களைக் கேட்க ஏராளமான ஜனக்கூட்டம் வருகிறது. அக் கூட்டத்தி லுள்ள யாவரும் தன் அபிப்பிராயப்படி நடப்பவர்களென்று எண் சற்று விலகச்சொல்லி அவனுக்குத் தரிசனமளித்ததாயும்தான் சரித்திரமிருக்கிறதே தவிர நீ உள்ளே வாவென்றழைத்ததாய்க் காணவில்லை. வேதசாஸ்திரங்களுக்கு விரோதமாகத் தீண்டா னுவது தகுமா. தகாது. கூட்டத்தில் பாதிக்குமேல் இவர் என்ன சொல்கிறாரென்பதைப்பார்ப்போமென்று கேட்கக் கூடின வர்களேதவிர தெரியாத உபதேசத்தைக் கேட்டு நற்கெதிபெறு வோமென்று வரவே இல்லை. மற்றும் கேட்கவந்தவர்களைக்காட் டிலும் வராத ஜனங்கள் எத்தனைமடங்கு அதிகமாய் இருக்கலா மென்று அவர்களது மனதுக்கு எது பிடித்தமென்பதையும் கவ னிக்கவேண்டாமா. உண்மையில் உலகில் காங்கிரஸில் சேராம லும், கோவிலில்தான் தைவமிருக்கிறதென்றும், அதன் முறைப் படித்தான் தரிசனம்செய்யப்போகவேண்டுமென்றும் எண்ணம் கொண்டிருக்கிற ஜனங்களில் பிராமணரல்லாதாருள்தான் அதிக மிருக்கிறார்கள். அவர்களிடம் இவர்கள் தீர்மானம் மணம் பெறுமா. கோவில் அதிகாரிகள் ஸம்மதிக்கிறதாயும் ஆனால் சட் டம் இடம் கொடுக்கவில்லையென்றும் அவர்கள் வருந்துவதாயும்

கூறிக்கொள்கிறார்கள். அதிகாரிகள் ஆகம நிபுணர்களா? இனி சட்டத்தைத் திருப்ப வழிசெய்யட்டும். அவ்விதம் திருத்தி யமைத்தபிறகு எல்லோரும் சுலபமாய்ப் போய் தரிசனம் செய் வார்களா? அங்கு கலகம் நேராமலிருக்கவேண்டுமே. இது ஏதோ சுலபமாய் முடியுமென்று தோன்றவில்லை. ஏதாவது காங் கிரஸ் பலத்தால் முயன்றால் ருஷ்யாவில் ஏற்பட்ட மதக்கலகம் வரலாம். இதெல்லாம் பார்க்கும்போது இவ்வித முயற்சியைத் தற்காலம் நிறுத்திக்கொண்டு முதலில் இதில் அனுதாபத்துடன் வாக்களித்திருக்கும் யாவரும் ஒன்றுகூடி தீண்டாச் சகோதரர்க ளைத் தங்கள் வீட்டிற்கழைத்து உண்டிசெய்வித்து அவர்கள் வீட் டிற்கு அவ்விதமே போய் புசித்துப் பிறகு தங்களது குழந்தைக களுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் விவாஹம் முதலியன நடத்திக்கொண்டு இவவிதம் ஒன்றுபட்டுவிடாமல் அவ்விதமே ஒவ்வொருவராய்ச் சேர ஆரம்பித்து உலகம் முழுமையும் ஒரு சகோதரத்தன்மைக்குட்படலாம். பிறகு நினைத்த காரியம் நடை பெறுவது வெகு சுலபம். ஒருசமயம் பிள்ளையாரைப் பிடிக்கப் போய் குரங்காய்முடிந்ததென்ற கதையைப்போல் இந்தியாவிலி ருக்கிற வேற்றுமைகளை ஒழிக்கப்போய் இது ஒரு பிளவு பலமாய் ஏற்படலாமோ என்றும் யோஜிக்கவேண்டியிருக்கிறது. ஒரு சம யம் ஒருகக்ஷியாரால் கோவிலில் தீண்டாதார் நுழைந்துவிட்டால் கலகம் ஏற்படாமலோ, அல்லது ஏற்பட்டு ஒருவாறு தீர்ந்த பிறகோ அக் கோவில் இனி நமக்கு வேண்டாமென்று ஒருசாரார் பிரிந்துவிடலாம். அவ்விதம் பிளவு நேர்ந்தால் சேர்ந்தபாடில்லை யென்றாகும். இவவிதம் பிரியுமா பிரியாதாவென்று யோசிக்க வேண்டும். இன்னொன்று யோஜிக்கவேண்டும். காந்தியவர்கள் உலகில் மேல் கீழ் என்ற வித்தியாஸமே இருக்கக்கூடாதென்று எண்ணுகிறதாயும், அதனால் எல்லோரும ஒரேபழக்கவழக்கமுள்ள வர்களாயும் இருக்கவேண்டுமென்று எண்ணுவதாயும் முற்காலத் தில் அவ்வித பாகுபாடு இருந்தாலும் தற்காலத்திற்கு அது பொருந்தாதென்றும் நான் சொல்லும் ஒற்றுமையே தற்போது வேண்டியதென்றும் கூறுகிறார். இது எக்காலத்திலும் பொருந் தாதெனலாம். தாய், தகப்பன், அண்ணன், தம்பி, குரு, சீடன், அரசன், சேவகன் என்பதாதி வித்தியாசங்களையும் அவரவர்கட் கேற்பட்ட தொழிலையும் மாற்றிக்கொள்ளமுடியுமா, மாற்றினால்

மூலக் வியாபாரம் நடைபெறுமா? எல்லோரும் யஜமானுய் இருக்கிறதா? எல்லோரும் சேவகனுய் இருக்கிறதா? இரண்டும் பொருந்தாது. ஆகவே வித்தியாஸத்தை ஸமமாய் எல்லோரையும் செய்வது கனவிலும் காணமுடியாததென்பது திண்ணம்.

இனி முடிவில் வெளிப்படையாய்க்கூறிவிடுகிறேன். காந்தியும் அவரது ஸகாக்களும் திடீரென பஞ்சமர், முதலியவர்களுக்கு ஆலயப்பிரவேசம் பொதுகிணறு குளம் முதலியவைகளில் மற்றவர்களோடு ஸம உரிமையாய் பிரவேசிப்பது முதலிய கார்யங்களைச்செய்து இந்தியாவுக்கு ஸ்வயராஜ்யம் வாங்கிவிடுவதென்பது முக்காலத்திலும் நடவாது. பஞ்சமர்களுடன் காந்தி சொல்கிறபடி ஸமமாய்ப் பழகுவதற்கு ஸவர்ணஹிந்துக்களில் 3ல் 2பங்கு ஒத்துக்கொள்ளாது. வேதசாஸ்திரங்களையெல்லாம் விட்டுவிட அவ்விதமே பெரும்பாலோர் சம்மதம் கொள்ளமாட்டார். காந்திமதமென்ற இந்துமதத்தை ஒப்புக்கொள்ள அவரது ஸகாக்களில் பலர் பின்வாங்கக்கூடும். கோவிலும் கிராமகிணறுவிஷயங்களிலும் கலகமோ அல்லது விரோதமோ ஏற்பட்டு தீர்க்கமுடியாத பிரிவு பலமாய் ஏற்படும். இவ்வித முறண்டால் ஸ்வாராஜ்யம் பூஜ்யமாய் விடலாம். காங்கிரஸ்ஸிலும் பிளவு ஏற்படலாம். உண்மையில் ஜாதி எல்லாம் ஒன்ருய்ப்போய்விடுமென்றேபவிஷ்யத்புராணங்கள் கூறுகின்றனவாயினும் அதன் காலம் எத்துணையோ நூற்றுண்டுகளுக்கப்புறம்தான். அதனது முன்வேலைதான் இப்போது நடக்கும். ஆகவே ஆத்திரப்பட்டுக்கொண்டு வேலைசெய்கிறதும் ஓர் காலத்திலும் அழியாத இந்துமதத்தை அழிப்பதற்காக ஏராளப் பொருட்செலவு செய்கிறதும் ஆஸுரநிர்ப்பந்தம் செய்வது இக்காலத்திற் பயன்படாது.

கடைசியில் பஞ்சமர் முதலியவர்களுக்கும் ஓர் வார்த்தைக் கூறுகின்றேன்,

பஞ்சமசகோதரர்களே? நீங்கள் இவர்களது மாயவலையில் சிக்கிக்கொள்ளாதீர்கள். இவர்கள் உங்களை சந்தியில் இழுத்துவிட்டு பின்வாங்குவார்கள். உலகம் ஏற்பட்ட காலம்முதல் இதுகாறும் நீங்கள் என்னகஷ்டத்தை எங்களிடமிருந்து அடைந்தீர்கள். எந்த கஷ்டத்தை விட்டு உங்களை நீக்குவதாய்க் கூறுகின்றன. தீண்டாமை விலக்கு என்று ஆரம்பித்து எத்துணை வருடங்களாயின. என்னென்னசுகம் இவர்களால் உண்டாயிற்று

எங்களிடமிருந்துவந்த கஷ்டங்கள் எவை எவை விலகிவிட்டன. இவ்விரண்டையும் எழுதிக் கணக்குப்பாருங்கள். இவர்கள் செய்யப்போகிறதாய்க் கூறும் ஸௌகர்யம் உங்களுக்கு வருமா? வந்தவுடன் ஆம் இப்போது நாம் சுகத்தை அடைந்தோமென்று சொல்லிக்கொள்வீர்களா? உண்மையில் இவர்கள் இவ் வேலையில் இறங்கியது முதல் உங்களுக்குத் தொல்லை அதிகரித்தது. சுகமே இல்லை. இம்மாதிரியே போனால் இன்னும் என்ன நேருமோ வென்பதை உங்கள் சொந்த புத்தியைக்கொண்டு சிந்தித்துப் பார்த்து வருங்காலத்தையும் நன்குயோசித்து உங்கள் தைவத்தின் உத்திரவுப்படி நீங்கள் நடக்கவேண்டுமென்பது என் கோரிக்கை. சுபம்.

ஓர் அனுதாபீ.

உ

பஞ்சமர்களின் ஆசையா?
மற்றவர்கள் கலகமா?

ஆலயப்ரவேசத்தில் ஆதிதிராவிடருக்கு வேகமா? மோஹமா? அல்லது, அந்நியர்கள் செய்யும் பிடிவாதமா?

ஏழைப்பஞ்சமர்கள் வேண்டுவது, வேலையும், கூலியும், துணியும், உணவும், இருப்பதற்கு வீடும்.

கோவிலும், தீர்த்தமும், எல்லார்க்குச் சமதையும் அவர் யாரிடம் கேட்டார்கள்?

பிழைப்பு வேண்டும், காசு வேண்டும், என்று தவித்திருப்போர்க்கு ஆலயம் நுழைவதால், பசி தீருமா? வாழ்வு ஆகுமா?

"ஸ்ரீ மீனாக்ஷி கோவிலில் அவர்கள் நுழையத்தான் வேண்டும்; அன்றேல், ஊருக்கு சாபம், நாட்டுக்குக் கேடு" என்று பத்திரிகையில் பொழிகிறார். ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார்.

"உங்கள் சூழ்ச்சி நாங்கள் அறிவோம். இந்தப் பேச்சு இப்போ வேண்டாம்" என்று அசட்டை செய்கிறார் மதுரைப் பஞ்சமர்.

"ஆலயப்ரவேசம் அனாவசிய வம்பு; வீணான தர்க்கம், எங்கள் ஜாதிக்குக் கேடு," என்றெச்சரிக்கையிடுகிறார் ஸ்ரீமான் மதுரைப்பிள்ளையும்.

"கைப்பிடித்திழுத்து கோவிலுள் தள்ளுவோம்" என்ற பிடிவாதம் யாரின் நன்மைக்காக?

தெருவிலும், வயலிலும், பிராம்மணரைக்காட்டிலும் பஞ்சமருடன் பழகுபவர் அப்பிராமணர் அல்லவா?

கொஞ்சமும் கூசாமல், எல்லாக் குதர்க்கமும் பிராம்மணர் மூலமாய்த்தானா வேண்டும்?

போது உடைமை வரட்டும்; சோத்துக்கள் வீதிப்போம்!
மரியாதை மாறடடும்; ஒழுங்குகள் தோலையட்டும்!
கோள்கைகள் குலையட்டும்; தேய்வங்கள் ஓடட்டும்!
குடும்பங்கள் கலையட்டும்; ஸமூகம் புரளட்டும்!
'ஸோவியட்' கோள்கைகள் எங்குமே பரவட்டும்!
அராஜகப் பேயும் தலைவிரித்தாடட்டும்!!
ஆனால், இதில் குணம் இல்லை; சுகம் இல்லை.
ஒழுங்குகள் மீறினால், யாருக்கும் கேடுதான்.

ராஜீய விஷயமா? சமூகப் புரட்சியா?

ஆலயப்ரவேசம் ஒரு அஸந்தர்ப்பக்கிளர்ச்சி. இதனால் ஸ்வராஜ்யப் போராட்டம் இப்போது உள்நாட்டுக் கலகமாய்த் திரும்பி இருக்கிறது.

நமது இந்துப்பிரமுகர்கள் ராஜீயவிஷயங்களில் எளிதாய் ஏமாறுகிறார்கள். மதத்தைத்தாக்கி, ஸமூஹத்தைப் பிளப்பதால் ராஜீயம் வலுக்குமா?

புதுஉரிமைகள் கொண்டுவரப் போராட்டம் செய்பவர்கள் பழைய உரிமைகளை அழிப்பது நியாயமா?

லண்டனில் அம்பேத்கார் பொதுத் தொகுதிக்கு சம்மதித்து ஸ்தானங்களை எண்ணி ஒதுக்கும்படி சொன்னார். அப்போது காந்திஜீ இணங்கியிருந்தால், மந்திரியின் மத்யஸ்தம் வந்தேயிராது.

தனித்தொகுதி தொலைந்தாலொழிய பட்டினியாலிறப்பேன் என்று காந்திஜீ கூறினார்; அவர் உயிரைக்காப்பாற்ற பூனா ஒப்பந்தம் செய்தார்கள்.

தாழ்ந்த வகுப்பினருக்கு பிரிட்டிஷ் மந்திரி கொடுத்தது 71ஸ்தானம்; பூனாவில் ஜாதிஹிந்துக்கள் ஒப்புக்கொண்டது 148 ஸ்தானம்.

தாழ்ந்த வகுப்பினர் தனியே ஓட்டுசெய்யும் எலெக்ஷன் முதலிலும், எல்லோரும் சேர்ந்த பொது எலெக்ஷன் இரண்டாவதும், நடத்தவேண்டுமென்றும் பூனா ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. காந்திஜீ வெளியே தள்ளின தனித்தொகுதி வேறொரு ரூபத்தில் உள்ளே நுழைந்துவிட்டது.

என்றாலும், "நடந்தது நடக்கட்டும்; எப்படியாவது ஸ்வராஜ்யம் வரட்டும்" என்று யாரும் எதிர்சொல்லவில்லை. நல்லதோ, கெடுதலோ, ராஜீயவிஷயத்தில், தலைவர்கள் சொல்லுவதே நமக்குச் சம்மதம்.

ராஜீய விஷயத்தை மத விஷயத்தில் திருப்புவது நீதியே அல்ல.

மத சீர்திருத்தமாம்! சமூக மறு அமைப்பாம்! ஜாதிவித்தியாசங்களை அழிக்கவேண்டுமாம்! பத்து தினங்களுக்குள் பாரத பூமியே புரண்டுவிட்டதாம்! என்னென்னமோ கூச்சல்கள் கிளம்பிவிட்டன!!

இந்த அனர்த்தம் யாருக்கு பிரீதி. யார் எதிர்பார்த்தார்கள்!

காங்கிரஸ் சபைக்கும், காந்திஜீ பேருக்கும் ஆதாவுண்டு. அதனை விபரீதத்தில் இழுப்பது நீதியா? தர்மமா?

ராஜீயவிஷயத்தில்தொடங்கின விசுவாஸத்தை,உற்சாகத்தை, ஒரு சிலர் பிடிவாதத்திற்காக திருப்புவதும் ஓட்டுவதும் உசிதமா; நியாயமா?

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

பெரியோர் சொல்லைப் பக்தியுடன் கேள்.

1. பாண்டவர்களைத் துர்யோதனன் காட்டிற்குத் துரத்தினனல்லவா? இதைக்கேட்டு வேதவியாஸர் வருந்தினர். ஏன்? அவர் இந்த வம்சத்திற்குக் காரணமல்லவா? அதுமாத்ரமல்ல. பாண்டவர் ஸாதுக்கள். தர்மசீலர்கள். அவர்களைக் காட்டுக்கனுப்பியது அதர்மமில்லையா? அதை ஸாதுக்கள் ஸஹிப்பார்களா?

2. வ்யாஸர் திருதராஷ்டிரனைப் பார்த்து நீயும் ஏன் அதற்கு ஸகாயமாயிருந்தாய்? என்று கேட்டார். அவன் தானும் தன் பிள்ளைகளும் செய்தது தப்பு என்று ஒத்துக்கொண்டான். ஆனாலும் பிள்ளையென்ற அபிமானத்தால் அதை ஆதரித்தேன் என்றான். அது வாஸ்தவந்தான். புத்ர ஸ்நேகம் பொல்லாதது என்று வ்யாஸர் கூறினர்.

3. அதற்கு உதாஹரணமாக ஓர் சிறு கதை சொன்னார். பசுக்களுக்கெல்லாம் ஆதித் தாய் காமதேநு. அது ஒருநாள் அழுதுக்கொண்டிருந்தது. இந்த்ரன் அதைப் பார்த்து ஏன் அழுகிறாய்? என்று கேட்டான். காமதேனு, பூமியில் ஒருவன் இளைத்தகாளையை அடிக்கிறான்பார். அது கலப்பையை இழுத்துச் செல்கிறது. அப்போதும் அடிக்கிறான்.

4. ஆதலால் அழுகிறேன் என்றது. பசுக்களை ஹிம்ஸிக்கலாமா? தேநு சபித்துவிடுவாளன்றோ? இந்த்ரன்மநம் தேநுவைக்கண்டு இளகிறது. உடனே நன்றாக மழைபொழியும்படி செய்தான். மழையில் எப்படி உழுவது? ஒரே வெள்ளமானதால் காளையை அவிழ்த்துவிட்டான் என்று வியாஸர் கூறினர்.

5. ஆனாலும் துர்யோதநனைப் பாண்டவருடன் ஸமாதானம் செய்துகொள்ளச்சொல். இதைப்பற்றி மைத்ரேயர் சொல்வார் என்றார். தான் உறவானதால் தன்னைவிட உறவில்லா மைத்ரேயர் நன்றாகச் சொல்லலாம் என்று எண்ணினர். அவர் சொல்வதைக் கேளுங்கள். இல்லையேல் சபிப்பார் என்று கூறிச் சென்றார்.

6. அவர் சொன்னபடி மைத்ரேயர் வந்தார். முறைப்படி அவரை வரவேற்றனர் அர்க்யபாத்யமளித்தனர். அவரும் அதை ஏற்று ஆஸநத்தில் உட்கார்ந்தார். தான் தீர்த்தயாத்ரைக்குச் சென்றபோது முநிவேடம் பூண்ட பாண்டவரைப் பார்த்தாராம். அதனால் துர்யோதனாதிகள் செய்ததை அறிந்தாராம்,

7. த்ருதராஷ்டிரன் முதலியவரிடம் அவருக்கு அதிக அன்புண்டாம. ஆதலால் அவர்களுக்கு நல்லதைச் சொல்ல வந்தாராம். அவர்கள் சூதாடியதும் பாண்டவரை வநமனுப்பியதும் தப்பு என்றார். துர்யோதனனைக் கூப்பிட்டு "நீ ஏன் இந்தக் காரியத்தைச் செய்தாய்?" பாண்டவரைப் பகைக்கலாமா?

8. ஜராஸந்தன், பகன் இடிம்பன்கிம்மீரன் முதலானவர்களை பீமன்கொன்றதை அறியாயா? அவர்களை விட வீரர் யார்? அவர்களைக்கொன்ற பீமனோடு நீ யுத்தம் செய்து ஜயிப்பாயா? அநியாயம்செய்யாதே! அவர்களுடன் ஸமாதானம் செய்துகொள் என்று மைத்ரேயர் உபதேசித்தார்.

9. துர்யோதனன் அதைக் காதுகொடுத்துக் கேட்கவில்லை. அவரைத் திரும்பியும் பார்க்கவில்லை, பூமியைப் பார்த்துக்கொண்டிருந்தான். காலால் பூமியைக் கீறினான். தன் தொடையைத் தட்டி சிறித்தான். ரிஷிக்கு நம் வீர்யம் தெரியுமா? இவர் எனக்கென்ன புத்திசொல்வது? என்று கர்வம்கொண்டான்.

10. மஹர்ஷி அதைப் பார்த்தார். கோபம்வந்துவிட்டது. அடே துர்யோதனா? என்ன அலக்ஷ்யம்! உனக்கு நன்மையைக் கூற வந்தேன்! தர்மத்தைச் சொல்வது என்கடமை என்று இங்குவந்தேன்! என் வார்த்தைக்குக் காதுகொடுக்கவில்லை! தொடையைத் தட்டிச் சிறித்தாயல்லவா? அத் தொடையைக் கதையால் முறித்து பீமன் உன்னைக் கொல்வான் போ!

11. என்று சபித்தார். வந்தவழியே திரும்பிச்சென்றார். அப்படியே துர்யோதனன் அடிபட்டிறந்தான். ஆதலால் பெரியோர் சொல்லை அன்புடன் கேட்கவேண்டும்.

வெ. ஸோமதேவசர்மா.

வாரவிருத்தாந்தம்.

எல்லைமீறிசெல்லாதே. கும்பகோணத்தில் ப்ரவஸர் ஸ்ரீசுந்தரராமய்யர் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் கூடியது. ஆலயங்களில் அந்நியஜாதியரை விடுவது சாஸ்த்ரவிரோதமென்றும் குருவாயூர் ஜாமரின் மதாபிமானத்தைப் பாராட்டியும், சண்டாளனை நான் இறப்பது நிச்சயமென்றார். யாரும் அவனைப் பிறிக்காது விட்டனர். சிறிதுநேரம் சென்று பகவான் விரும்பினல் எவனும் பிழைப்பான். அவன் அருள் இல்லையேல் எவரும் இறப்பது நிச்சயம் என்று கூறிக்கொண்டே வெளியில வந்தார். நம்பியவருக்கு தைவம் ப்ரத்யக்ஷமாம்.

ஆலயத்தில் விட சட்டம்வருமானால் ராஜப்ரதிநிதி அதற்கு சம்மதி கொடுக்கக்கூடாதென்றும்,புதிய அரசியல்திருத்தத்தில் அரசாங்கம் மதவிஷயத்தில் தலையிடாமல் சட்டம் செய்யவேண்டுமென்றும் பல தீர்மானங்களைச்செய்தது. எல்லைமீறி செல்வோருக்கு எச்சரிக்கை செய்தது, இங்ஙனம் மதாபிமானங்கொண்ட கூட்டத்தை ஆமோதிக்கிறோம். செயல் நம்முடையது. பலன் பகவததீநம்!!

சூழ்ச்சி. 10௳ மதுரையில் சண்டாளர்களது பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. ஆலயம் செல்வதால் சண்டாளருக்கு யாதொருநன்மையுமில்லை. முக்யமாகவேண்டியது உணவும் ஆடையும் குடிக்க ஜலமுமே. இதைவிட்டுநம்மை ஆலயத்திற்கு அழைப்போர் எதையோகருதி சூழ்ச்சிசெய்கின்றனர். இதைக்கண்டு நாம் ஏமாறக்கூடாதென அச்சபை தீர்மானம்செய்தது. உள்ளதைஉள்ளபடியே கூறிய இச்சபையின் சொல்லை அப்படியே ஆதரிக்கிறோம்.

ஆந்த்ர பிராமண மஹா ஸபை. 9௳ பெஜவாடாவில் காசி க்ருஷ்ணமாசார்யர் தலைமையில் கூடி கலிகோலாஹலத்தைக் கண்டித்து தர்மப்ரசாரம் செய்தது. அடிக்கடி இதுபோன்ற ஸபைகள்கூடி தர்மோபதேசம் செய்துவந்தால் நாடு செழிக்கும். தர்மம் ஓங்கும். அதர்மும் அநாசாரமும் அகலும்.

குருபக்த சிகாமணிகள். 9௳ விஜயதசமியன்று ஸ்ரீஜகத்குரு பகவத்பாதாள் விஜயம்செய்வதற்குரிய அழகிய நர்மேனாவை ஸ்ரீமான் தண்டபாணி அய்யர் ஸமர்ப்பித்தார். அது மிக லகுவாகவும் வேலைப்பாடமைந்ததாகவும் பக்தரது உள்ளத்திற்கேற்றபடியுமிருந்தது. இவர் ஓர் சிறு புத்தகவியாபாரியேயானாலும் அவரது ஆசார்யபக்தி அளவிலடங்காதது. பல லக்ஷம் பக்தர்கள் வந்து பகவத்பாதாளைத் தர்சிக்கும்படி விசாலமான இடத்தை அழகாக அமைத்துத்தந்த ஸ்ரீமான் கே. பாலசுப்ரமண்யய்யரவர்கள் ஆசார்யபக்தி எனும் ஆநந்தவாரிதியில் அமிழ்ந்திருக்கிறார்; மற்றும் சிலர் தனது ஆழ்ந்த ஆசார்ய பக்தியை வெளிக்காட்ட வகையின்றி விழிக்கின்றனர். குருபக்தர் வாழ்க!!

உயர்ந்த தாநம். 9௳ திருப்பதி வெங்கடேசஸ்வாமி உத்ஸவ விக்ரஹத்திற்கு 25 ஆயிரம் ரூபாய் செலவுசெய்து கட்டவால் ராணிஸாஹிப் ஓர் வைரகிரீடம் ஸமர்ப்பித்தாள். முற்பிறவியில் தாநம்செய்ததால் இப்பிறவியில் அவள் ராணியானாள். இப்போ

தும் ஸத்பாத்ரத்தில் செய்த உத்தமதாநத்தின் பயனாக மறுபிறப்பில் அவள் சக்ரவர்த்திநியாகலாம். கலியில் தாநமே சிறந்த தர்மமன்றோ?

முடிவென்ன ஆகும். 7வ சண்டாளருடன் ஸமபங்க்தி போஜநத்தையும் ஸஹவிவாஹத்தையும்தான் ஆதரிக்க முடியாதெனப் பண்டித மாளவ்யா கூறியதற்கு வடதேசத்தில் பலத்த எதிர்ப்பு உண்டானது. சாஸ்திரவிதியை மீறி அவர்களுக்கும் போலி கருணையால் சிறிது இடமளித்தால்பின்னர் இவைபோன்றவைகள் வந்தேதீரும். ஆதலால்தான் தீர்க்க தர்சநமுள்ள முனிவர் இங்ஙனம் விதிசெய்தனர். கலியின் குணமான வர்ணஸாங்கர்யமே இவ்வியக்கத்தாலுண்டாம் பயன். ஆஸ்திகர் கூடியவரை எதிர்த்து பகவத்யாநம் செய்யவேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. பண்டித மாளவ்யா போன்றோர் இனியேனும் விழிப்பரோ?

மரம்வைத்தவன் தண்ணீர்விடுவான். 10வ தூத்துக்குடியில் சில பிராமணர்கள் சண்டாள பங்க்தியில் உட்கார்ந்து புஜித்ததால் ஓர் உத்தம வைதிகர் அத்தகையவர் வீட்டிற்கு எவரும் புரோஹித வேலைக்கும் போகக்கூடாதெனக் கூறினார். இனி அந்த வைதிகர்களைக்கூப் பிடுவதில்லை என இவர்கள் யோசிக்கின்றனராம். இந்த பாபவிருத்தியை விட்டவருக்கு பகவான் அன்புடன் அன்னமளிப்பர். இவ்வுத்தமரது செயலை ஆமோதிக்கிறோம்.

செய்கையில் காட்டுக. 26வ மிகப்பபல வைதிகப்ரதிநிதிகள் எல்லா மாகாணங்களிலிருந்தும் 18பேர் ஒன்றுகூடி ஸிம்லாவில் ராஜப்ரதிநிதியைக்கண்டு புதிய சீர்திருத்தத்தில் மதத்தில் தலையிடாமலிருக்கும்படி ஓர் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டனர். வைஸ்ராய் அதைக் கவனிப்பதாகக் கூறினார். அதைச் செய்கையில் காட்டுவார். நமது கக்ஷி மிகப்பரபலமானதெனக் காட்டினாலொழிய அவர்கள் ஒன்றும் செய்யப்போவதில்லை. ஆஸ்திகரும் கும்பகர்ண குணத்தை விடப்போவதில்லை. தைவமே கதி!!

அத்புதமான பக்தர். 10வ பர்லூர்காட் என்ற... ஓர் பக்தரை அரவந்தீண்டியது. சிகித்ஸை செய்ய பலர் முன் வந்தனர். பக்தரோபா சிவலிங்கத்தை இறுக்கக் கட்டிக்கொண்டு கடலிலுதித்த ஹாலாஹலத்தை உண்டவன் என் விஷத்தை அகற்றுவான். என்னை நீங்கள் லிங்கத்தைவிட்டுப் பிரித்தால்